


**01. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி மியான்மர் அதிபர் U Min Aung Hlaing உடன் புதுதில்லியில் உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

2. மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவ்ஹான் "விவசாய நிலங்களை பாதுகாக்கும் இயக்கத்தை" இன்று தொடங்கிவைக்கிறார்.

3. முதலமைச்சர் திரு. விஜய் திருச்சி வருவதை ஒட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பிற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வரும் 5ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

5. பிரஞ்ச் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, பிரேசிலின் **Marcelo** இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி மியான்மர் அதிபர் U Min Aung Hlaing உடன் புதுதில்லியில் தற்போது உயர்மட்ட பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளார்.

இருநாடுகளுக்கிடையிலான எல்லை பாதுகாப்பு, பிராந்திய இணைப்பு, வர்த்தகம் மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்து இதில் விவாதிக்கப்படுகிறது.

5 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள மியான்மர் அதிபர் இன்றுமாலை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் சந்தித்து உரையாட உள்ளார்.

***********

பிரதமர் - ஸ்வாநிதி

சாலையோர வியாபாரிகளுக்கு கடன் உதவி வழங்கும் ஸ்வாநிதி திட்டத்தின் மூலம் அவர்களின் வாழ்க்கை தரம் மேம்படுத்தப்பட்டிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இத்திட்டம் தொடங்கி 6 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் லட்சக்கணக்கான வியாபாரிகள் கடனை எளிதாக பெறுவதற்கும், புதிய வாய்ப்புகளை உறுதி செய்வதற்கும் பெரிதும் உதவிகரமாக இருப்பதாக பாராட்டியுள்ளார்.

பிணையம் இல்லாமல் 15 ஆயிரம், 25 ஆயிரம் 50 ஆயிரம் ரூபாய் வரை, ஒரு கோடியே 12 லட்சத்திற்கும் அதிகமாக கடன்கள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

***********

சிவ்ராஜ்சிங்

மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் "விவசாய நிலங்களை பாதுகாக்கும் இயக்கத்தை" மத்திய பிரதேசத்தில் இன்று தொடங்கிவைக்கிறார்.

வரும் 30ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த பிரச்சார இயக்கத்தில் உரங்களை சீராக பயன்படுத்துதல், வானிலை சார்ந்த சவால்களை எதிர்கொள்ள விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் ஆலோசனை வழங்குதல், பல்வேறு வேளாண் திட்டங்களின் பயன்களை கிராமங்களுக்கு நேரடியாக கொண்டு செல்லுதல் உள்ளிட்ட அம்சங்கள் இடம்பெறுகின்றன.

இத்திட்டத்தின் மூலம், வேளாண் கடன் அட்டை, பயிர் காப்பீடு திட்டம், மண்வள அட்டைகள் போன்ற திட்டங்களின் பலன்கள் விவசாயிகளை சென்றடைவது உறுதி செய்யப்படும் என கூறினார்.

***********

ராஜ்நாத்சிங்

இந்தியா ஆஸ்திரேலியா பாதுகாப்பு அமைச்சர்களின் பேச்சுவார்த்தை புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங், ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்டு மார்லஸ் பங்கேற்கும் இப்பேச்சுவார்த்தையில், பாதுகாப்பு ஒத்துழைப்பு, ராணுவ ஒருங்கிணைப்பு, கூட்டு உற்பத்தி மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு ஆகியவை முக்கியமாக இடம்பெற உள்ளன.

இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் ஸ்திரதன்மை மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் வகையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

***********

பியூஷ் கோயல்

இந்தியா ஓமன் பொருளாதார ஒப்பந்தம் இன்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் இருநாடுகளுக்கிடையேயான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று மத்திய வர்த்தகம் தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதிய சந்தைகளை திறப்பது, ஏற்றுமதியை அதிகரிப்பது, முதலீடுகளை ஈர்ப்பது வேலை வாய்ப்பு உருவாக்குவது ஆகியவற்றின் மூலம் நாட்டின் மாணாக்கர், பெண்கள் விவசாயிகள் மீனவர்கள் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இந்த ஒப்பந்தம் பயனளிக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

ஏறக்குறைய 7 லட்சம் இந்தியர்கள் ஓமன் நாட்டில் உள்ளதாக கூறிய அவர், ஓமனிலிருந்து இந்தியாவிற்கு வரும் அந்நிய செலாவணி ஆண்டுதோறும் இரண்டு பில்லியன் டாலர் அளவில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

***********

மாநிலங்களவை தேர்தல்

மாநிலங்களவையில் காலியாக உள்ள 24 உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தலும்,

தமிழ்நாடு, மஹாராஷ்டிரா ஒடிசா ஆகிய மாநிலங்களில் தலா ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான இடைத்தேர்தலும் அடுத்த மாதம் 18-ம் தேதி நடைபெற உள்ளது.

இதற்கான அறிவிக்கை இன்று வெளியிடப்பட்ட நிலையில் வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கியது.

வரும் 8 ஆம் தேதிவரை மனுக்களை தாக்கல் செய்யலாம்.

தமிழகத்தில் திரு.சி.வி. சண்முகம், மயிலம் சட்டப்பேரவை தொகுதியில் வெற்றிபெற்றதை அடுத்து மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததால் தேர்தல் நடைபெறுகிறது.

***********

நீதி பதி கள்

உச்சநீதிமன்றத்திற்கு 5 புதிய நீதிபதிகளை குடியரசு தலைவர் நியமித்துள்ளதாக மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு.அர்ஜூன் ராம் மெஹ்வால் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் உச்சநீதிமன்றத்தின் மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 37ஆக உயர்ந்துள்ளது.

இதனிடையே உச்சநீதிமன்ற நீதிபதியாக தமிழ்நாட்டை சேர்ந்த மூத்த வழக்கறிஞர் திருமதி வெங்கட சுப்பிரமணி மோகனா நியமிக்கப்பட்டதற்கு முதலமைச்சர் திரு.விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில் உச்சநீதிமன்ற வரலாற்றில் மூத்த வழக்கறிஞராக பணியாற்றி நேரடியாக உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படும் இரண்டாவது பெண் என்ற பெருமையையும், தமிழ்நாட்டை

சேர்ந்த முதல் பெண் என்ற பெருமையையும் அவர் பெற்றிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நியமனம் பெண் கல்வி முன்னேற்றத்திற்கும் பொருளாதார முன்னெற்றத்திற்கும் உந்து சக்தியாக திகழும் என கூறியுள்ளார்.

***********

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. விஜய் திருச்சி புனித ஜோசப் கல்லூரி வளாகத்தில், திருச்சி கிழக்கு தொகுதியில் தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவில் இன்றுமாலை பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் QR குறியீட்டுடன் கூடிய நுழைவு சீட்டு வழங்கப்பட்டுள்ள ஐந்தாயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

முதலமைச்சரின் வருகையை ஒட்டி திருச்சி மாநகரில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் ட்ரோன் பறக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. பிரதீக் தயாள் தெரிவித்துள்ளார்.

***********

சிலிண்டர்

நாடுமுழுவதும் 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டர் விலை இன்று அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சென்னையில் வணிக சிலிண்டரின் ஒன்றின் விலை 46 ரூபாய் உயர்ந்து மூவாயிரத்து 283 ரூபாய்க்கு விற்பனையாகும் என எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இருப்பினும் வீட்டு உபயோகத்திற்கான சிலிண்டர் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை.

***********

விஸ்வநாதன்

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பிற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வரும் 5ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிட் பேசிய அவர், கலந்தாய்வு தேதி, வரும் 29ஆம் தேதி அறிவிக்கப்படும் என்று கூறினார்.

முதலமைச்சருடன் கலந்தாலோசித்து பல்கலைகழகங்களுக்கு விரைவில் துணை வேந்தர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

***********

நிர்மல்குமார்

தமிழகத்தில் தகுதியின் அடிப்படையில் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவார்கள் என மாநில சட்ட அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் வழிகாட்டுதலின்படி வெளிப்படைத்தன்மையுடன் இந்த நியமனம் இருக்கும் என குறிப்பிட்டார்.

காவிரியின் குறுக்கே மேகதாது அணை விவகாரத்தில் தமிழக அரசு சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

வாய்ஸ்

***********

மரியாதை

நீதி கட்சியின் வைர தூண் சர். ஏ. டி. பன்னீர் செல்வம் பிறந்த நாளை ஒட்டி திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில அமைச்சர்கள் திரு.ராஜ்மோகன், திரு. ரமேஷ், சட்டப்பேரவை துணை தலைவர் திரு.ரவிசங்கர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

சுதந்திரபோராட்ட தியாகி அஞ்சலை அம்மாளின் 136ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் காந்தி பூங்காவில் அமைந்துள்ள அன்னாரின் சிலைக்கு மாநில வீட்டு வசதி நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ராஜ்குமார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில் குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

***********

JEE

பொறியியல் படிப்புக்கான JEE முதன்மை தேர்வு முடிவுகள் அதன் இணையதளத்தில் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

1 லட்சத்து 79 ஆயிரத்து 694 மாணாக்கர் தேர்வு எழுதியதில் 10 ஆயிரத்து 107 மாணவிகள் உட்பட 56 ஆயிரத்து 880 பேர் தேர்ச்சிபெற்றுள்ளனர்.

***********

புதிய ஆட்சித்தலைவர்கள்

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் புதிய ஆட்சித்தலைவர்கள் இன்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.

நெல்லை மாவட்டத்தில் கல்வி சுகாதாரம், அடிப்படை தேவைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என ஆட்சித்தலைவராக இன்று பொறுப்பெற்றுக்கொண்ட திரு.ஆனந்த் மோகன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

தர்மபுரி மாவட்டத்தில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுக்கொண்டு ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்ட நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான சாத்திய கூறுகள் ஆராயப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவராக புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட லீலா அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் அரசின் அனைத்து திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என மாவட்டத்தின் புதிய

ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுக்கொண்ட திருமதி ரேவதி கூறியுள்ளார்.

***********

கப்பல்

இந்திய கடலோர காவல்படையின் சாரங் கப்பல் தனது 27 ஆண்டுகால சிறப்பான சேவைக்கு பின்னர் பணியிலிருந்து விடை பெற்றது.

சென்னை துறைமுகத்தில் நடைபெற்ற பாரம்பரிய விழாவில் கடலோர காவல்படையின் முழு மரியாதையுடன் சாரங் கப்பல் விடுவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கடலோர காவல்படையின் கிழக்கு கடற்கரை பிரிவின் தளபதியும், கூடுதல் தலைமை இயக்குனருமான டோனி மைக்கேல் தலைமை தாங்கினார்.

***********

வெலிங்டன்

குன்னூர் வெலிங்டன் ராணுவ பயிற்சி முகாமில் பயிற்சி முடித்த ஆயிரத்து 36 அக்னி பாத் வீரர்களின் அணிவகுப்பு இன்று நடைபெற்றது.

ராணுவ பயிற்சி மையத்தின் கமாண்டன்ட் Krishnendu-Das தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக முன்னாள் லெப்டினன்ட் ஜென்ரல் நரசிம்மன் பங்கேற்றார்..

இப்பயிற்சியில் சிறந்து விளங்கிய 9 அக்னி பாத் வீரர்களுக்கு பதக்கங்களும் நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன.

***********

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் பள்ளி வாசல்களில் பணியாற்றும் உலமாக்கள் மானியத்தொகையுடன் இருசக்கர வாகனம் பெற விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டத்தில் உள்ள 420 கிராம பஞ்சாயத்துகளில் இன்றுமுதல் வரும் 15ஆம் தேதிவரை மண்வள பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் ரேசன் பொருட்கள் நாளையும் நாளை மறுநாளும் வழங்கப்படும் என ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

சீர்காழி மாவட்ட அரசு இசை பள்ளியில் வரும் கல்வியாண்டிற்கான மாணாக்கர் சேர்க்கை தற்போது நடைபெறுவதாக ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு கலை பண்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் இப்பள்ளியில் 13 வயது முதல் 25 வயதுடையோருக்கு தேவாரம், குரலிசை, பரதநாட்டியம், வயலின் மிருதங்கம் உள்ளிட்ட பிரிவுகளில் மூன்றாண்டு முழு நேர பயிற்சி வழங்கப்படுகிறது.

***********

வானிலை

தென்மேற்கு பருவமழை கேரளம் பகுதியில் அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் தொடங்க கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெற்கு கேரளம் மற்றும் அதனை ஒட்டிய தமிழக பகுதி, தென்கிழக்கு அரபிக்கடல், மற்றும் லட்சத்தீவு பகுதியின்மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

மேலும் கிழக்கு விதர்பா முதல் தெற்கு உள் கர்நாடகா தமிழகம் வழியாக காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுவதால் திருச்சி, கரூர், நாமக்கல், நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, மதுரை, விருதுநகர், தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

***********

டென்னிஸ்

பிரஞ்ச் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, பிரேசிலின் **Marcelo Demoliner** இணை – ஜெர்மனி இணையை இன்று எதிர்கொள்கிறது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது